பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paperin SriLanka.

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 17 வியாழக்கிழமை 31-05-2001 தொலைபேசி: 3378 ஒலி 163

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

● அரசு - புலிகளுக்கிடையில்

# சமாதானத்தை ஏற்படுத்துவது கடினமானதாகவே உள்ளது!

## தூதுவர் எரிக்சோல் தெரிவிப்பு

(வெளிநாட்டு செய்திச் சேவை)

**அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதில் தற்போது கடினமான நிலை தென்படுகிறது.**

**அவர்கள் தங்கள் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் வரை நோர்வேயின் சமாதானப்பணிகள் தாமதமாகும். எனினும் சமாதானத்திற்கான முன்முயற்சி நடவடிக்கைகளில் நோர்வே தொடர்ந்தும் ஈடுபடும்.**

இவ்வாறு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்டுவரும் நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக் சோல்ஹெய்ம் நேற்று தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய தமிழ் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் பேட்டி அளித்திருந்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவருவதில் பலசிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது, அப்படியிருந்தும் சமாதான முயற்சிகளில்இன்னமும் ஒருமுடிவை காணவில்லை.

அரசினதும் விடுதலைப் புலிகளினதும் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாதவரை சமாதானத்திற்கான பாதை

(8,ம் பக்கம் பார்க்க)

## செய்தித் தணிக்கை முற்றாக நீக்கம

(கொழும்பு)

செய்தி ஊடகங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தணிக்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பணிப்புரையை அடுத்து முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

இத்தணிக்கை நீக்கத்தின் பிரகாரம் இராணுவம் தொடர்பான செய்திகளுக்கு இனிமேல தடையிருக்க மாட்டாது.

1998ம் ஆண்டின் அவசரகாலச்சட்டத்தின் முதலாம் இலக்க விதிகளுக்கமைய இராணுவச்செய்திகள் மீதான தடை அமுலுக்கு வந்தது இராணுவத் தகவல்களை வெளியிடுவதும், ஒலிபரப்புச்செய்வதும், தடைசெய்யப்பட்டிருந்தது.

[8 ஆம் பக்கம பார்க்க]

நிமலராஜனின் வீட்டுக்கு அண்மையில்

## காவலரணிலிருந்த படையினரின் வாக்குமூலத்தைபதியுமாறு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றில் நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளில் ஈடுபட்டு வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி ரஞ்சித் சில்வா சம்பவம் தொடர்பான ஐந்து பக்க அறிக்கையை நீதவானிடம் கையளித்தார்;

சம்பவங்களை ஆராய்ந்த நீதிபதி, நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டதினத்தன்று அவரது வீட்டுக்கு அயலில் உள்ள காவலரண்களில் கடமையிலிருந்த படையினரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்து நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் சம்பவ இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சைக்கிளின் கைப்பிடியில்உள்ள கைவிரல் அடையாளங்களைஒப்பிட்டு மன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் குற்றப்புலனாய்வுப் பொலிசாருக்குஉத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் வழக்கு விசாரணை சம்பந்தமான விபரங்களை தமிழில் அல்லது ஆங்

(8.ம் பக்கம் பார்க்க)

அமைச்சர்கள

## ஆதரவு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிக குமாரதுங்கா தலைமையில அமைச்சரவை நேற்று முன் தினம் காலை கூடியுள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கதிர்காமர் இனப்பிரச்சினை தீர்வுக்கு மேறகொள்ளபபடும் சமாதான முயறசிக்கு ஆதரவு அளிகக வேண்டுமென்று அமைச்சரவையைக கேட்டுக் கொண்டார்.

அமைச்சரின் இந்தக்கோரிக்கைக்கு ஏனைய அமைச்சர்கள்

(8;ம பக்கம் பார்க்க)

## யாழ். வர்த்தகர்கள் நேற்று ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி வடபிராந்திய உதவி முகாமையாளர் திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 00 மணியளவில் யாழ் நகரில் ஒன்றுகூடிய சுமார் 250 ற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் ஊர்வலமாக ஈ. பிடி. பி. யின் தலைமைச் செயலகத்திற்குச் சென்று மகஜர் கையளித்தனர்.

வர்த்தகர்கள் மத்தியில் அமைச்சர் உரையாற்றும் போது மக்கள் வங்கியின்நிர்வாகத்தேவைகருதிஅனைத்து இடங்களிலும் இடமாற்றங்கள் நடைபெறுகின்றன. இருப்பினும் உங்கள் கோரிக்கை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி விரைவில் சாதகமான பதிலை தெரியப்படுத்துவேன் எனத்தெரிவித்தார். (இ)

மட்டக்களப்பு மண்முனையில்

## இராணுவ நடவடிக்கை!

சேதவிபரம் வெளியாகவில்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான மண்முனை மேற்குப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையொன்றை படைத் தரப்பினர் ஆரம்பித்துள்ளனர்.

இவ் இராணுவ நடவடிக்கை காரணமாக மட்டக்களப்பு நகரின் மண்முனை மேற்கு பிரதேச செயலகம பாடசாலைகள மற்றும் மாநகரசபை அலுவலகம் என்பன இயங்கவில்லை மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது

இத்தாக்குதல் நடவடிக்கை குறித்த சேதவிபரம எதுவும் இதுவரை வெளியிடபபடவிலலை. [இ]

குவைத்தில் பாதிப்படைந்தோரில்

## நஷ்டஈடு பெறுவோரின் விபரங்கள் வெளியானது

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்புப் பெற்று குவைத்துக்கு சென்று, அங்கு இடம் பெற்ற யுத்தத்தினால் பாதிப்படைந்து நாடு திரும்பிய யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களில் குவைத் நஷ்டஈடு பெறுவோரின் விபரத்தை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

நேற்று யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த 400 பேரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விபரங்களை நாளை முதல் 7ந் திகதி வரை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ் அலுவலத்தில் பார்வையிடலாம்.

அத்துடன் நஷ்டஈட்டை பெறத் தகுதியுடையவர்களுக்குரிய காசோலைகளும் இத்தினத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## வெட்டுப்புள்ளியை குறைக்க கோரி நேற்று மாணவர்கள் பேரணி!

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை குறைத்து மேலும்கூடுதலான மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்க வேண்டுமெனக்கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்துக்குதெரிவான மாணவர்கள் அமைதிப்பேரணியொன்றை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10 00மணியளவில் யாழ்பாணத்தில் ஒன்றுகூடியசுமார் 200ற்கும் மேற்பட்டமாணவர்கள ஊர்வலமாக ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்டதலைமைச் செயலகத்துக்கு சென்றனர்.

அங்கு வடக்குபுனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவைச் சந்தித்து தமதுகோரிக்கைகள் அடங்கிய மகஜரை அமைச்சரிடம் கையளித்தனர்.

மேற்படி மாணவர்களுடனான சந்திப்பின்போது அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாயாழ் பல்கலைக்கழ

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### தவறி விட்டது

சவுதி அரேபியாவிலிருந்து அனுப்பப்பட்ட மா. இராசேஸ்வரன் ஹட்டன் நஷனல் வங்கி 4407 இலக்கத்திற்குரிய ஐயாயிரம் ரூபா பெறுமதியான காசோலை ஒன்று கொக்குவிலுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது, கண்டெடுத்தவர்கள் வேல்முருகன் றேடஸ் 56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். என்றமுகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்;

(3177)


## மீன் பிடிக்க தடை

(ஊர்காவற்றுறை)

வேலணைத்துறை கடலில் வெள்ளிக்கிழமைகளில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினாலேயே வேலணைக் கடலில் வெள்ளிக்கிழமைகளில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-75)

## நிர்வாக சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழுவின் கீழ் இயங்கும் சாயி சிறுவர் இல்ல நிர்வாக சபைக் கூட்டம் ஜூன் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணிக்கு கோப்பாய் சாயி சிறுவர் இல்ல மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

## 1983 ஜூலைக் கலவரத்தை ஆராய

# பாராளுமன்ற தெரிவுக்குழு அமைப்பு

# ஐ. தே. க. ஆட்சிக்கு கரிபூசும்செயல்

### அமைச்சர் டக்ளஸ் மீது சந்திரசேகரம் எம்.பி. சாடல்

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தை ஆராய்வதற்கு குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு, ஐக்கிய தேசியக் கட்சியை குறை கூறுவதும், அந்தக் கட்சிக்கு கரிபூச வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தையும் தவிர வேறு எந்த நல்ல நோக்கமும் இருக்க முடியாது.

1983 ஆம் ஆண்டு இனக் கலவர பின்னணியை ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்திருப்பதன் பின்னணியில்,

மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

20 வருடங்களின் முன் நடந்த ஜூலைக் கலவரத்தின் பாதிப்புகள் முடிந்த கதையாகிவிட்டன.

தாங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர் என்ற ரீதியில், இந்த அரசினது ஆட்சியில் மிக அண்மைக் காலத்தில் சகல சிறுபான்மை மக்களின் மனதை உலுக்கிய சம்பவங்கள் சிலவற்றை நினைவுபடுத்துகிறேன்.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 25 இற்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன் பின்னணியில் தலவாக்கலை வன்முறையால் பலர் இறந்தும் பல இலட்சம் சொத்துக்கள் இழக்கப்பட்டும் உள்ளன.

இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை ஆராய்வதற்கு ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதா?

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் மரணம், தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் மரணம் என்பன இன்னும் புரியாத புதிராகவே உள்ளன.

உலகத்தின் கவனத்தை ஈர்த்த செம்மணிப் புதைகுழி விவகாரம் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை ஆராய்வதற்கு ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டதா?

எனவே தங்களின் துணிச்சலையும், அரசியல் நேர்மையையும் வெளிப்படுத்தும் விதத்தில், உங்களின் ஆட்சிக் காலத்தில், மிக அண்மையில் நடந்த மேற்படி சம்பவங்களுக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவினை யமைத்துவிட்டு அதற்குப் பின், 83 கலவரத்தைப் பற்றிப் பேசுவது தான் உங்களுக்கு அரசியல் கௌரவமாக இருக்கும் என்றுள்ளது. (உ)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மே மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன;

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 185622 ஏ | 190017 ஏ |
| 190017 பி | 190017 சி |
| 190017 டி | 192835 ஏ |
| 192835 பி | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 159995 ஏ | 168173 ஏ |
| 177898 ஏ | 1840.5 ஏ |
| 185693 ஏ | 185747 ஏ |
| 185747 பி | 185747 சி |
| 185820 ஏ | 188385 ஏ |
| 188508 ஏ | 189817 ஏ |
| 189818 ஏ | 189891 ஏ |
| 189891 பி | 189928 ஏ |
| 189928 பி | 189981 பி |
| 190110 ஏ | 190210 ஏ |
| 190210 பி | 190233 ஏ |
| 190233 பி | 190233 சி |
| 190247 ஏ | 190253 ஏ |
| 190254 ஏ | 190256 ஏ |
| 190256 பி | 190268 ஏ |
| 190268 பி | 190269 ஏ |
| 190269 பி | 190269 சி |
| 190273 ஏ | 190273 பி |
| 199273 சி | 190274 ஏ |
| 190274 பி | 191581 ஏ |
| 19.581 பி | 192515 ஏ |
| 192515 பி | 192515 சி |
| 192515 டி | 192515 ஈ |

| | |
|---|---|
| 192530 ஏ | 192581 ஏ |
| 192581 பி | 192581 சி |
| 192603 ஏ | 192656 ஏ |
| 192657 ஏ | 192657 பி |
| 192665 ஏ | 192665 பி |
| 192798 ஏ | 192798 பி |
| 192817 ஏ | 192820 ஏ |
| 192820 பி | 192829 சி |
| 192824 ஏ | 193818 ஏ |
| 193818 பி | 193818 சி |
| 193818 டி | 193860 ஏ |
| 193860 பி | 193860 சி |
| 193867 ஏ | 193867 பி |
| 193959 ஏ | 193959 பி |
| 194005 ஏ | 194042 ஏ |
| 194042 பி | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 180449 ஏ | 183625 ஏ |
| 183771 ஏ | 183858 ஏ |
| 183858 பி | 185469 ஏ |
| 185469 பி | 188214 ஏ |
| 188214 பி | 188274 ஏ |
| 183274 பி | 190113 ஏ |
| 190206 ஏ | 190206 பி |
| 190206 சி | 192510 ஏ |
| 192510 பி | 192510 சி |
| 192517 ஏ | 192576 ஏ |
| 192708 ஏ | 192710 ஏ |
| 192710 பி | 192710 சி |
| 192710 டி | 192710 ஈ |
| 192710எப் | 192748 ஏ |
| 192778 ஏ | 192792 ஏ |
| 192792 பி | 193850 ஏ |
| 193850 பி | 193850 சி |
| 193937 ஏ | 194018 ஏ |


## விற்பனைக்கு

இல 45, முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள நான்கு மாடிகள் கொண்ட கட்டடத் தொகுதிதிருத்த வேலைகள் செய்ய வேண்டிய நிலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-

மா. இராசேஸ்வரன்
வேல் முருகன் றேடஸ்
56 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்; (3178)


### காணாமற்போனோர் பற்றிய

## விசாரணைகளுக்கு சமுகமளிக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ் குடா நாட்டில் இருந்து 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், கீழ் வரும் காணாமற் போனோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சியங்களை விசாரணைகளுக்காக யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

★ நந்தவடிவேலு ராஜேந்திரகுமார் (பி-92)
இராசாவின் தோட்டம் அத்தியடி, யாழ்ப்பாணம்.
முறைப்பாடு:- தாமோதரம்பிள்ளை நந்தவடிவேலு
சாட்சி:- சுப்பிரமணியம் (யா/சர்வோதய ஊழியர்)

★ சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (பி-131)
நாவற்குழி, கைதடி;
முறைப்பாடு:- சபாபதி சிதம்பரப்பிள்ளை
சாட்சி:- நடேசமூர்த்தி யோகநேசன்

★ சின்னத்தம்பி கோபால கிருஸ்ணன் (பி-77)
கைதடி தெற்கு
முறை பாடு:-சங்கரன் சின்னவன்
சாட்சி:-சிவபாதம் செல்வராணி

★ கதிரவேலு ஜெயந்தன் (ஏ-21-1)
முறைப்பாடு:- கதிரவேலு நகுலேஸ்வரி
நவாலி அரசடி
சாட்சி;- யோகேஸ்வரன்

★ பெனாண்டோ ஜெயகாந்தன் (பி-130)
218,குறூஸ் வீதி யாழ்ப்பாணம்
முறைப்பாடு:- ஆசீர்வாதம் பனாண்டோ
சாட்சிகள்:- ஜெபகாந்தன் சபாசினி (மனைவி)
சுமகலா

★ பொன்னையா ஜெயராசா (பி-43)
சண்டிலிப்பாய்ச் சந்தி
முறைப்பாடு:- சுபத்திரை பொன்னையா
சாட்சி:- கிளியன்

★ யோண்பிள்ளை அன்ரன் அமலதாஸ் (ஏ-21-12)
கேரதீவு வீதி நாவற்குழி
முறைப்பாடு;- மேரிஅன் ஜெனிஸ்ரா
சாட்சி:- கோபாலசிங்கம் ஜீவபாலன்

★ வல்லிரம் பாஸ்கரன் (பி-85)
மறவன் புலவு கிழக்கு சாவகச்சேரி

★ சின்னத்தம்பி ஞானேந்திரன் (பி-83)
எழுதுமட்டுவாள்
முறைப்பாடு:-பரமலட்சுமி குடமியன் வரணி
கொடிகாமம்
சாட்சிகள்;- ஞானேந்திரன் சந்திரலதா (மனைவி)
சூட்டி (தேனீர் கடை உரிமையாளர்)

★ கதிரவேல்பிள்ளைகேதீஸ்வரன் (பி-7)
கைதடி நாவற்குழி
முறைப்பாடு:-கேதீஸ்வரன் மனோன்மணி

(உ-10)

## இராசி பலன்

31-5-2001
(வைகாசி 17, வியாழன்)
நவமி பி ப 2.31 வரை
உத்தரம் பி இ 12.34 வரை
ராகுகாலம் 4.22-2.52
நல்லநேரம் 7.22-8.52

**மேடம்**
சந்தோசமான சம்பவம், சத்துரு ஜெயம், முயற்சி விருத்தி, ஆரோக்கிய நிலை.

**இடபம்**
தாழ்வுநிலை, காரிய விகற்பம், கௌரவக்குறை, சோகம்;

**மிதுனம்**
தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம், ரோக பயம், தாய்வழி உறவு;

**கடகம்**
முயற்சி நன்மை, வாக்கு பலிதம், புதியவர்கள் சந்திப்பு, தனவரவு.

**சிங்கம்**
வாக்கு கலகம், பொருள் விரயம், காரியதாமதம், பிரியம்.

**கன்னி**
தேக சௌக்கியம், மறதி, ஜனவசியம், முயற்சிகைகூடும்.

**துலாம்**
தனவிரயம், காரியதாமதம், அமைதிக்குறைவு, நிலைப்பிரிவு;

**விருச்சிகம்**
கீர்த்தி, காரியநன்மை, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி.

**தனுசு**
தொழில் மேன்மை, காரிய அனுகூலம், பிறர்உதவி, அதிகாரம்;

**மகரம்**
காரிய தாமதம், கட்டுப்பாடு, பிரயாணம், புதிய திட்டமிடல்;

**கும்பம்**
மனஸ்தாபம், பிரயாண பயம், வீண் தொல்லை, காரிய தாமதம்;

**மீனம்**
காரிய நன்மை, சௌக்கிய விருத்தி, தனவரவு, கௌரவம்;

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது.)

வளவன்

### எரிபொருள்

## பவுசர் தடம்புரண்டதில் இருவர் உடல் கருகிப் பலி

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் பவுசர் ஒன்று பாதையை விட்டு பள்ளத்தில் வீழ்ந்ததால் அதில் பயணம் செய்த சாரதியும் உதவியாளரும் உடல் கருகிப் பலியாகினர்.

மேற்படி பவுசர் இரவு 9 00 மணியளவில் கொழும்பில் இருந்து எரிபொருள் ஏற்றி வந்த சமயமே விபத்துக்குள்ளாகியுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை தம்புள்ள பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (உ-9)

## பொதுசன மாதாந்த உதவிப்பண கொடுப்பனவு மீளாய்வு விரைவில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவையாளர்பிரிவிற்கானபொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு, மீளாய்வுகள் சமூகசேவை உத்தியோகத்தரினால் கிராம சேவையாளர் பிரிவுரீதியாக நடைபெறவுள்ளன.

மீளாய்வு இடம்பெறவுள்ள கிராம அலுவலர் பிரிவு மற்றும் இடம்பெறும் திகதி குறித்த விபரம் வருமாறு;

ஜே/115-ஜூன் 4 ஆம் திகதி ஜே/117, 118-8/6, ஜே/120-14/6, ஜே/122-18/6, ஜே/124-22/6, ஜே/126-28/6, ஜே/116-12/6, ஜே/119-11/6, ஜே/121-15/6, ஜே/123-21/6, ஜே/125-25,6, ஜே/127-29/6.

மேற்படி பிரிவைச்சேர்ந்தவர்களை தவறாது அந்தந்த தினங்களில் மீளாய்வுக்குச் சமுகம் கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் அறிவித்துள்ளன; (உ-6)

### சோதனை தீவிரம்

[ஊர்காவற்றுறை]

புங்குடுதீவில் கடற்படையினரால் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அங்கு சென்று வரும் மக்கள் தெரிவிக்கின்றனர், (உ-75)

# அரசியல் நோக்கத்திற்காகபொய்க்குற்றச்சாட்டை

# என்மீது சுமத்துவது எவ்வகையிலும்நியாயமல்ல

## நிலைமையை விளக்கி டாக்டர் தெய்வேந்திரன் அறிக்கை

**யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன்தமக்கு எதிராக விடுக்கப்பட்ட பொய்ப் பிரசாரங்களுக்குப்பதிலளிக்குமுகமாக வெளியிடப்பட்ட அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகிறது.**

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக நல்லமுறையில் இயங்கிவந்த மாநகர சுகாதார சேவைகள் கடந்த 2 மாதங்களாக தடைப்பட்டு சீர்குலைந்த நிலையில் இருப்பதைக்காண்கிறோம் இதுசம்பந்தமாக பல முறைகள் முதல்வருக்கும்,சபை உறுப்பினர்களுக்கும் உண்மை நிலைபற்றி விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது:

ஆனாலும் அதைப்பற்றி கவனம் எடுக்காமல் என்னையும் நேர்மையாக தமது கடமைகளைச் செய்த ஊழியர்களையும் அவமதிக்கும் விதத்தில் பொய்யான பிரசாரங்கள் ,குறிப்பாகசபைக்கூட்டங்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் முதல்வரும் அவரைச் சார்ந்த சில உறுப்பினர்களும் மற்றும் சுய நலத்திற்காக இயங்கும் ஒரு சில சுகாதார ஊழியர்களும் கடந்த 4 மாதங்களாக மேற்கொண்டு வந்துள்ளனர். இதனுடைய நோக்கம் ஒரு நல்ல கட்டமைப்பாகதொழில் நுட்பத்துடன்,காலத்தின் தேவைகளை அனுசரித்து நிபுணத்துவத்துடன் இயங்கிவரும் சுகாதார சேவையை குலைப்பதாகும்:

குறிப்பாக ஒரு சுகாதார சேவை மக்களுடைய சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அமைய வேண்டும். அதை வழிநடத்துபவர் அந்தந்தத்துறையில்நிபுணத்துவம் பெற்ற ஒரு வைத்திய நிபுணராக இருத்தல் வேண்டும்.அத்துடன் கட்டாயமாக ஒரு மாநகர சுகாதார சேவைக்கு பொறுப்பானவர். சமூக சுகாதாரத்தில் நிபுணத்துவத் தேர்ச்சி பெற்றவராக அமைவது விரும்பத்தக்கது. அந்த நிலையில் தான் கடந்த 10 வருடங்களாக யாழ். மாநகர சுகாதார சேவை இயங்கிவந்தது

இதை உணராதமுதல்வரும் அவரைச்சூழ்ந்துள்ள சிலரும் அரசியல் நோக்கங்கள், தங்களின் ஆதிக்கத்தையும், அகங்காரத்தையும் திருப்திப்படுத்துவதற்காக சில நடவடிக்கைகளையும், பொய்ப்பிரசாரத்தையும் கட்டவிழ்த்து விட்டு தமது நோக்கத்தை அடைய விரும்புகின்றனர்:

உதாரணமாக,

கடந்த 21. 5. 2001 ல் நடந்த மாதாந்த சபைக்கூட்டத்தில் முதல்வர் ரவிராஜ் தெரிவித்த தகவல்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை.(22.5.2001அன்று உதயனில் வெளியானவை)

★ அதில்நான்சபைமுதல்வரையும் சில அங்கத்தவர்களையும் அவமதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.இது சம்பந்தமாக கடந்த 6 மாதங்களாக முதல்வரையும், சபை அங்கத்தவர்களையும் பல முறை சந்தித்துள்ளேன் ஏதாவது சபைக் கூட்ட அறிக்கையில் அப்படி அவமதிக்கும் சொற்களை நான் பயன்படுத்தியதில்லை. அப்படி இருந்தால்அவர்அதை சுட்டிக்காட்டலாம். மாறாக பொது மக்கள்,மற்றும் சபையின் நன்மைகருதி12.12.2000 அன்று நான் அவர்களுக்கு எழுதிய வழிகாட்டல் கடிதம் சுகாதார சேவையை மேலும் சிறப்பாக முன்னெடுக்க அவர்களின் ஒத்துழைப்பை பெற முன் வந்தது.

★ எமது ஊழியர்களின் தன்னலம் கருதாத கடமையை செய்யவிடாமல் முதல்வர் தடுத்த பொழுதும் தமது வேலைகள் கடமைகள் என்று செய்து வந்திருக்கிறார்கள்; அவர்களிடம் உள்ள ஆவணங்களை இதற்குபயன்படுத்தினார்கள்.முதல் வரின் கண்ணோட்டத்தில் சுகாதார சேவையைமுன்னெடுப்பது சட்டவிரோதமானது.

முதல்வரை ''திடுக்கிட வைத்த தகவல்கள்'' சம்பந்தமாக அவரது கூற்று வழமையான பொய்யான தகவலாகும்:

14 வருடங்களாக யுனிசெப் அமைப்பு எம்முடன் இணைந்துமக்களின் அன்றாட தேவைகளான நீர், மலசல கூட அமைப்பு, சுகாதாரக் கல்வி, ஊழியர் சேவைக் காலப் பயிற்சி, தொண்டர் பயிற்சி போன்றனவற்றை வழங்கி வருகின்றது: எமது வருடாந்த அறிக்கைகளில் முழு விபரம் வழங்கப்பட்டுள்ளது. அதில் நிதியின் பயன்பாடு பற்றிவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.நிதி அறிக்கை கணக்காளர் அவர்களினால் கையொப்பமிட்டு அனுப்பப்படுகின்றது: முதல்வர் குறிப்பிடும் ஒன்றே கால் இலட்சம் ($1\frac{1}{4}$) நிதி கலாநிதி சபா ஜெயராசாவினால் ஆக்கப்பெற்ற 'குழந்தை உளவியல்' பற்றிய நூல் வெளியீட்டுக்கான செலவுக்காக யுனிசெப் அமைப்பினால் கடந்த ஐப்பசி மாதத்தில் காசோலை அனுப்பப்பட்டது:

ஆணையாளரின் பெயரில் அனுப்பிய அக் காசோலை அவருக்கு உடன் கையளிக்கப்பட்டு மாநகர சபையின் கணக்கில் இதுவரை வைப்பிலிருக்கின்றது. சுகாதார பகுதி புத்தகம் வெளியிட சகல ஒழுங்குகளையும் தை மாதம் மேற் கொண்டும் இதுவரை முதல்வராலும் ஆணையாளராலும் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றது. கணக்கு விபரம் பற்றி அவர் கூற்று முற்றிலும் பொய்யான தகவலாகும்:

அடுத்து யுனிசெப் உபகரணங்கள் அன்பளிப்புக் கடிதம் கடந்த வருடம் பங்குனி மாதம் எனக்கு அனுப்பப்பட்டு அதை உடன் ஆணையாளரிடம் கொடுத்து உபகரணங்களை கொழும்பிலிருந்து கொண்டு வரஏற்பாடு செய்யுமாறு கோரியிருந்தேன்: அதற்கான நடவடிக்கை ஆணையாளரினால் நாம் பல முறை அறிவித்தும் இதுவரை எடுக்கப்படவில்லை. முதல்வரின் கூற்று பற்றி யுனிசெப் நிறுவன யாழ்பிரதிநிதி சிறிஸ்கந்தராசாவிடம் வினவிய போது முதல்வரை தாம் சந்தித்த போது சகல விபரங்களைக் கூறியும் அதை திரித்து முதல்வர் சுகாதாரப்பகுதியில் குற்றம் சாட்டி இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்:

கடந்த 14 வருடங்களாக ஒழுங்காக உதவி வந்த யுனிசெப் நிறுவனத்தின் உதவி இந்தவருடம் தடைப்பட்டிருப்பதற்கு முழுப்பொறுப்பும் முதல் வரையே சாரும் யுனிசெப்வின் இவ்வாண்டிற்கான திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டதன் காரணமாக போஷாக்கு நிலையங்கள் 15. 3: 2001 முதல் இயங்கவில்லை. போஷாக்கின்மையால்வாடும் குழந்தைகள்-தாய்மார் இதனால் பாதிப்படைந்துள்ளார்கள்.

**அம்புலன்ஸ் சேவை**

சுகாதாரப் பகுதியின் முயற்சியினால் யு.என்.டீ.பி.எமது பாவனைக்கும் அவசர நோயாளரை ஏற்றும் பணிக்குமாக 1999 ம் ஆண்டு ஆடி மாதம்அம்புலன்ஸ்வண்டியை வழங்கியது இது இரவு/பகல் சேவையை அவசர நோயாளருக்குவழங்கியதுடன் மற்றும் சிகிச்சைநிலைய சேவை, சுகாதாரகல்வி நிகழ்ச்சி ஆகியவற்றுக்கும் பயன்பட்டு வந்தது. இடப்பெயர்வு காலத்தில் சுகாதார சேவை தடைப்படாமல் வழங்க அது உதவியது. முன்னாள் ஆணையாளர் அம்புலன்சை தமது மற்றும் சில உறுப்பினர்களின் பயன் பாட்டுக்குக் கேட்ட பொழுது அதனை என்னால் அங்கீகரிக்க முடியவில்லை அதற்கு பழி வாங்கும் நோக்கில் அம்புலன்ஸ் சாரதியும், தொழிலாளியும், கடந்த மார்கழி மாதம் தொடக்கம் இடை நிறுத்தி வைக்கப்பட்டு அம்புலன்ஸ் சேவையை ஸ்தம்பிதமடைய வைத்தவர் முதல்வர் ரவிராஜ்.

தனக்கு ஒரு வாகனத்தை பெறமுடியாத முதல்வர், எனது முயற்சியினால் பெறப்பட்ட அம்புலன்ஸ் வண்டியை கடந்த 15. 3: 2001 அன்று என்னை சட்டத்திற்கு முரணான கட்டாய லீவில் அனுப்பிவிட்டு எமது அலுவலகப்பூட்டுக்களை உடைத்து அம்புலன்ஸ் வாகனத்தை எடுத்துச்சென்று தொலைபேசி இலக்கத்தை மாற்றி தமது காரியாலயத்தில் வைத்து அவரின் செய்கையினால் தடைப்பட்ட அம்புலன்ஸ் சேவையை புதிய ஊழியர்களைநியமித்து தான் ஒரு 24 மணி நேர சேவையை புதிதாக வழங்குவதாக உண்மைக்கு புறம்பான பிரசாரத்தை மாதாந்தக்கூட்டத்தில் மேற்கொண்டிருக்கின்றார்:

திரு. ரவிராஜ் மற்றும் அவரைச் சூழ்ந்துள்ள 10 உறுப்பினர்களும் திட்டமிட்டு என்னை சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்ற முடியாதபடி மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டனர்.

வழமையான அரச ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை பேணியும் ஒரு வைத்தியர் என்ற முறையில் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை பின்பற்றியும் கௌரவ ஆளுநருக்கு எனதுமுறையீடு 28.3.2001ல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான விசாரணை 11. 4. 2001 மேற்கொள்ளப்பட்டு ஆளுநர் படிப்படியாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அவர் இறுதி முடிவு வரும் வரை காத்திராமல் முதல்வரும், அவரை சார்ந்தவர்களும் திட்டமிட்டு பொய் பிரசாரம் மேற்கொண்டு வருவதினால் என்னால் இந்தக் கடிதம் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படுகிறது.

ஆளுநர்ன் முடிவுகள் வெளிவருயவரை எமது பணியாளர்கள் கடந்த திங்கட்கிழமை 28 ஆம் திகதி தொடக்கம் தமது வழமையான கடமைகளை செய்யுமாறு எனது வேண்டுகோளுக்கிணங்க ஆற்றிவருகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் எமது சுகாதார சேவைகள் மேலும் சீர்குலைந்து மக்களுக்கு கடுமையான மீளமுடியாத (தொற்று நோய் பரம்பல் போன்ற) நிலைமை ஏற்படுவதைத்தடுப்பதாகும். ஆளுநரின் முடிவு வந்ததும் சுகாதாரவைத்திய அதிகாரியாக கடமையை மீண்டும் மேற்கொள்வேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

மக்களை பொறுத்தவரை ஆளுநரின் முடிவு வந்தபின் நானும் எனது பணியாளர்களும் முழுமையாக கடமையை மேற்கொள்ள எனக்கும், எமது பணியாளர்களுக்கும் முன்னர் வழங்கியது போல் ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

அதுவரை முதல்வர் ரவிராஜும் அவரைச்சூழ்ந்துள்ளசில சபை உறுப்பினர்களும் பொறுமையாக இருந்து, தவறான பிரசாரங்களை மேற்கொள்ளாமல் இருக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கல்வித்துறை

# தனியார் மயமாகாது

# ஜனா.உறுதிபடதெரிவிப்பு

[கொழும்பு]

நாட்டின் அரச வங்கிகளும் கல்வித்துறையும் தனியார் மயமாக்கப்படாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்:

கடந்த செவ்வாய் இரவு தேசிய தொலைக்காட்சியானரூபவாஹினிக்குஅளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் பல்கலைக்கழகங்கள் உட்பட ஏனைய கல்வித்துறைகளையும் தனியார் மயமாக்கக்கோரி கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையும்,

உயர்கல்வி அமைச்சர் இந்திக்க குணவர்த்தன பல்கலைக்கழகங்களை தனியார் மயமாக்க நாடு ஒருபோதும் சம்மதம் தெரிவிக்காது என்று அறிக்கை வெளியிட்டமையும் தெரிந்ததே. (உ-7)

# சமாதானத்தை ஆதரித்து 10 இலட்சம் பேரிடம் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

சமாதானத்துக்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நாடு பூராகவும் பத்து இலட்சம் பேரின் கையெழுத்தினைச் சேர்க்கவுள்ளதாக மக்கள் சமாதான முன்னணி அமைப்பு தெரிவித்துள்ளது:

அத்துடன், பத்து இலட்சம் பேரின் கருத்துக்களை தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தவும் சமாதான முன்னணி அமைப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது:

இச் சமாதானப் பிரசார முன்னெடுப்பு அடுத்த மாதம் ஆறாம் திகதி பொசன் தினத்தில் அநுராத புரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ-7)

---

இன்று சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினமாகும்;

## புகை வாழ்வின் பகை

வாழும் போதே - வாயில்
சுய கொள்ளி வைக்கும்
'சூரர்களே'!
உங்கள் சுவாசத்திற்கு
''காபனுடன்'' ஏன்
கட்டாய திருமணம்?
நிசப்தமாய் இயங்கும்
நுரையீரல்களை;
'நிக்கொட்டின்' கொண்டு
நிரப்புவது நியாயமா?

உயிர் மூச்சின்பயணத்திற்கு
உதவுகின்ற மூக்கை
புகைபோக்கியாக்கும்
உரிமை - உனக்கு
எங்கிருந்து கிடைத்தது?
புன்னகை பூக்கும் வாய்கள்
நெருப்பைப் பூப்பதில்
அப்படியென்ன
ஆடம்பரமிருக்கிறது?

புகைக்கையில் - நீ
உள்விடுவது புகையல்ல!
தவணை முறையில்
மரணத்திற்கு விடும்
அழைப்பு!
ஒவ்வொரு புகைத்தலிலும்
வாழ்வில் ஐந்து செக்கன்
தொலைகிறதென்பது
எப்போதோ அறிந்த நிஜம்

புகைத்தல் என்பது.........
கவலையைக் கலைக்கும்
ஏற்பாடல்ல!
அது.........
சுகமாகப் புரியும் தற்
கொலை!
புற்று நோய்க்கும்,
கசத்திற்கும்
பூரிப்புடன் விடுக்கும்
அழைப்பு!
மொத்தமாகக் கூறின்
உன் சுற்றத்திற்கு
சொல்லாமல் கொடுக்கும்
தண்டனை அவ்வளவே!

இன்னும்............
உன் தற்கொலையை
தவணை முறையில்
நிகழ்த்த விரும்பின் - நீ
தாராளமாகப் புகை
வசந்தத்தை அனுபவிக்க
உருவான உடம்பில்
விஷம் தடவ விரும்பும்
உனக்கு
எதைச் சொல்லி இனி
யென்ன............
.......................?!

-ரீ. ரீ. மயூரன்-

## புகை குடிப்பான்

● ஓ ... ... மானிடனே!
புகைக்காதீர் புகைக்காதீர்
புகைக்கும் உன்னை
புகை குடிப்பான்......

● இருபத்தோராம் நூற்றாண்டில்
காட்டுத்தீபோல பரவி வரும்
புகைத்தலை ஒழித்திடுவோம்
புதுமையாக வாழ்ந்திடுவோம்!...

அரியகுமார் யசிகரன்,
தாவடி.
க. கு அ இல - 127

## பயிற்சி வகுப்பு

நல்லூர், யாழ்ப்பாணப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சைக்கான-முன் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 4 ஆம் திகதி பி.ப. 3மணிக்கு யா/சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில ஆரம்பமாகவுள்ளது. (உ-6)

# தென்னிந்திய வாடைக்காற்று மூலம்

# குடல் தொற்று நோய்க்கிருமிகள் பரவுகின்றன

## எச்சரிக்கையாய் இருக்குமாறு சுகாதாரத்துறை அறிவுறுத்து

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதியில் 45 வீதமானவர்கள் மாத்திரமே மலசலகூடங்களைப் பயன்படுத்துவதுடன்,

44 வீதமானவர்களுக்கே நன்னீர் கிடைப்பதாக சுகாதாரத்துறைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை,

குடல் தொற்று நோய் கிருமிகள் தென்னிந்தியாவில் இருந்து வாடைக்காற்று மூலமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு பரவுவதுடன், இக் கிருமிகளின் தாக்கம் நாடு பூராகவும் பரவும் அபாயம் எதிர்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவிர, புத்தூரில் தொழு நோய்வேகமாகப் பரவி வருகின்றமை அவதானிக்கப் பட்டதையடுத்து, அங்கு சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்தப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பும் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-77)

## கும்பாபிஷேகம்

(துன்னாலை)

துன்னாலை அருள்மிகு ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. (உ-41)

## திருவிழாத் திருப்பலி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண கத்தோலிக்க யாத்திரைத் தலமாகியபுனித சிந்தாத்திரை அன்னை ஆலய வணக்க மாதத்திருவிழாத் திருப்பலி இன்றுமு.ப10.00 மணிக்கு ஆலயபங்குத்தந்தை அருட்திரு எரிக்றொஷான் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-7)

## தப்பியோடி விட்டதாக கருதி

# தேடப்பட்ட இராணுவச் சிப்பாய் குளத்தில் இருந்து சடலமாக மீட்பு

(கொழும்பு)

வெள்ளவாய, குடாஓய இராணுவ பயிற்சி முகாமைச் சேர்ந்த இராணுவச்சிப்பாயொருவர், குளத்தில் நீர் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் நீரில் மூழ்கி மரணமானார்.

இச்சம்பவத்தில் நிரோஷ் குமார் (வயது 20) என்ற இராணுவச்சிப்பாயே மரணமானவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; வெள்ளவாய, குடாஓய பயிற்சி முகாமைச் சேர்ந்த 55 இராணுவப் பயிற்சியாளர்கள நீர் விளையாட்டுப் பயிற்சியில் முகாமிற்கு அருகில் உள்ள குளத்தில் ஈடுபட்டனர். பயிற்சி முடிந்து இராணுவத்தினர் அணிவகுத்து நின்றபோது 54 பேரே அணிவகுத்து நின்றனர் ஒருவரைக் காணவில்லையென்பது தெரியவந்ததும் அனைவரையும் குளத்தில் இறங்கி தேடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குளத்தில் எங்கு தேடியும் அவரைக் கண்டுபிடிக்க வில்லை!

இதனால் சந்தேகமடைந்த சக இராணுவத்தினர், பிரஸ்தாப இராணுவச் சிப்பாய் டிமிக்கி கொடுத்துவிட்டு தப்பியோடிவிட்டாரென இராணுவத் தலைமையகத்துக்கும் வெள்ளவாய பொலிஸாருக்கும் தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் பிரஸ்தாப சிப்பாயைத்தேடிவலைவிரித்துக் கொண்டிருந்த சமயம் மேற்படி குளத்தில் இரு நாட்களின் பின்னர் இராணுவச் சீருடையில் சடலமொன்று மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அச் சடலம் காணாமல் போனவரென கருதப் பட்டவரின் சடலமென பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

(இ)

# கசிப்பு உற்பத்தியாளருக்கு அதிகபட்ச தண்டனை

## வழங்க வேண்டுமென ஆணையாளர் கருத்து

(யாழ்ப்பாணம்)

சட்ட ரீதியாக உயர்ந்த பட்ச தண்டனைகளை வழங்குவதன் மூலம் யாழ். குடாநாட்டில் தற்போது அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தியை ஓரளவு கட்டுப்படுத்தலாம் என தாம் கருதுவதாக மதுவரி ஆணையாளர் எஸ். சிவானந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: சமுதாயத்தில் மிக வறுமை நிலையில் உள்ளவர்கள் இத்தொழிலில் அதிகம் ஈடுபாடு காட்டி வருகின்றனர்.

கசிப்பு மிக குறைந்த விலையில் கிடைப்பதனாலும் பலர் இதை நாடுகின்றனர்.

இத்தகையவர்கள் தாமாகத் திருந்தாவிடில் இவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம். இருந்த போதிலும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக எமது திணைக்களம் கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது.

கசிப்பு உற்பத்திக்கு எதிராகச்செயற்படும் அமைப்புக்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத்தயாராகவுள்ளோம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் தான் இத் தீய செயலைக் கட்டுப்படுத்த முடியும் என்றார்.

(உ-15)

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இம் மாதம் இரட்டித்த நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு வாரங்களாகத் தொண்டைமானாறு முதல் சக்கோட்டை வரையிலான கடற்கரைப் பகுதியில் கடற்றொழிலினை மேற்கொண்டுள்ளபடைத்தரப்பு அனுமதி மறுத்தமையினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இம்மாத நிவாரணத்தை இரட்டிப்பாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்.

இதுகுறித்து பணிப்புரையினையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மேலதிக அரசாங்க அதிபர்து. வைத்திலிங்கத்திற்கு விடுத்துள்ளார்.

வடமராட்சிப் பகுதியில் மீன்பிடித் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டமையையடுத்து, கடந்த திங்களன்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஒன்றிணைந்து ஊர்வலமாகச் சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்தனர்.

அதன்பின்னர் மீனவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் நிவாரணத்தை இரட்டிப்பாக வழங்குவது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, வடமராட்சிப் பகுதியில் உள்ள மீனவர்கள் உட்பட குடாநாட்டில் உள்ள மீனவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் முகமாக மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் படைத்தரப்பு உயர் அதிகாரிகள் ஆகியோர் கொண்ட உயர்மட்ட மாநாட்டை விரைவில் கொழும்பில் நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# வீதிப்போக்குவரத்து விதிகள்குறித்தவிளக்கவுரை இன்று இருபாடசாலைகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவின்ஏற்பாட்டில் யா. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்றைய தினம் நண்பகல் 12.00 மணிக்கு வீதிப் போக்குவரத்து விதிகள், வீதியில் பயணம் செய்யும் போது கடைப்பிடிக்கும் வழிமுறைகள் குறித்த விளக்கவுரை இடம்பெறவுள்ளதாகப் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு சார்ஜன் இத்தகொட தெரிவித்தார்.

யாழ் பொலிஸ் நிலைய அதிகாரி குடாஹெட்டி தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில், பிரதான பொலிஸ் பரீட்சகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இது போன்றதொரு விளக்கவுரை நிகழ்வு இன்றைய தினம் யா மத்திய கல்லூரியிலும் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தகொட மேலும் தெரிவித்தார். (உ)

# நாட்டின்இனப்பிரச்சினைத்தீர்விற்கு எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும்

## அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைக்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் உலக வர்த்தக சந்தைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்திலேயே அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்:

அமைச்சர் அங்கு மேலும் கூறுகையில்,

நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு முடிவு கட்டும்காலம் நெருங்கியுள்ளது. இந் நிலையில் எதிர்க்கட்சி அரசாங்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

2006ம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவிக்கு சந்திரிகா குமாரதுங்க போட்டியிடுவார்.

அதுவரை நாட்டை ஆளுகின்ற பொதுஜனஐக்கியமுன்னணி அரசைகவிழ்க்க எதிர்க்கட்சியினர் எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

(வ)

# சைவசமயப் போட்டி முடிவுகள் வெளியாகின

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபை நடத்திய அறநெறிப் பாடசாலை மாணவர்களிற்கிடையிலான சைவசமய போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

மூன்று பிரிவாக நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களினையும் பெற்ற மாணவர்களின்விபரம் வருமாறு;

கீழ்ப்பிரிவு:-

1 ஆம் இடம்- யோ. தேவகரன்- க. புனிதன்

3 ஆம் இடம்- க. நிருஷா

மத்திய பிரிவு:-

1 ஆம் இடம்- க. ரனிதா

2 ஆம் இடம்- ம. ருணதாஸ்

3 ஆம்இடம்- வி. டிபன்றாஜ்

மேற்பிரிவு:-

1 ஆம் இடம்- பா. தனிக்கா

2ஆம் இடம்- ச. ரவிவர்மன்

3 ஆம் இடம்- வி. புஸ்பவாணி

(உ-75)

# மூளாய் வீதி மக்களுக்கு சீரான மின் விநியோகம்

[சுழிபுரம்ச்சிமோட்டை]

சுட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் புதிதாக பொருத்தப்படும் மின்பிறப்பாக்கியின் மூலம் மாவடி மூளாய்வீதிமக்களுக்கு சீரான மின் விநியோகம் கிடைக்குமெனநம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் மின்சாரம் இருந்தும் சீரானமுறையில் அது விநியோகிக்கப்படாமையினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவந்தனர் என்பதும் இப்பகுதியிலுள்ள கைத் தொழில் ஆலைகளும் பலசிரமங்களுக்குமத்தியில் இயங்கி வந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

[உ-59]

# உளநல மேம்பாட்டு கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு உளநல மேம்பாடு தொடர்பான கருத்தரங்கு அண்மையில் நடத்தப்பட்டது.

சாந்தியகத்தின் உத்தியோகத்தர்களினாலேயே இவ் உளநல மேம்பாட்டுக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கு தொடர்ந்தும் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-75)

## வளிமண்டல

# ஆராய்ச்சி நிலையம் வெள்ளி முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வளிமண்டல ஆய்வுகளினை மேற்கொள்ளும் வகையில் மீண்டும் யாழ் குடாநாட்டில்அமைக்கப்படும் வளிமண்டல ஆராய்ச்சிநிலையம்,

திருநெல்வேலியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வாராய்ச்சி நிலையம் மூலமாக வளிமண்டலவியல் அவதானிப்புக்களும் விவசாய வளிமண்டல அவதானிப்புக்களும் நடைபெறும் எனவும்.

விவசாயதுறையினர், மீன்பிடி துறையினர், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வுக்கற்கைகளை மேற் கொள்வோர் நிர்மாணிப்புப் பணிகளில் ஈடுபடுவோர் பெரிதும் பயன் அடைவர் எனவும், வளிமண்டல ஆராய்ச்சித்திணைக்கள உத்தியோகத்தர் என். ஏ. அமரதாஸ தெரிவித்தார்.

(ந-6)

## இன்று ஒரு தகவல்

# என்ன செய்தால் என்ன?

சீன நாட்டில்சிறந்த ஞானிகளுள் ஒருவராகத் திகழ்ந்தவர் சுவாங்சே. அவருக்கு எண்ணற்ற சீடர்கள் இருந்தனர். முதுமையால் தளர்ச்சி அடைந்திருந்த சுவாங்சே மரணப் படுக்கையில் இருந்தார். மருத்துவர்களும் அவர் உயிரைக் காப்பாற்ற இயலாது என்று கைவிட்டு விட்டனர் அவருடைய சீடர்கள குருவை எப்படிச் சிறப்பாக அடக்கம் செய்வது என்று தங்களுக்குள் உரக்கப்பேசிக் கொண்டிருந்தார்கள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சுவாங்சே கண்விழித்தார். சீடர்களை அழைத்து மெல்லிய குரலில் 'என் பிணத்தை அடக்கம் செய்வதற்காக ஏன் இப்படிக் குழம்பிக் கொள்கிறீர்கள்? பரந்த பூமியும், விரிந்த வானமும் எல்லோருக்கும் வாய்த்த சவப்பெட்டி. என்பிணத்தை பரந்த வெளியில் எங்காவது போட்டுவிட்டுச் செல்லுங்கள். அதுதான்இயற்கை முறை இதை விட்டு ஆடம்பரமான முறையில் ஊர்வலம் நடத்தி என்னை அடக்கம் செய்வதை நான் விரும்பவில்லை' என்று சொன்னார். இதைக் கேட்டுச் சீடர்கள் திகைத்தனர். அவர்களில் ஒருவர் மிகவும் பணிவுடன் 'குருவே! தாங்கள் சொன்னபடி செய்தால் தங்கள் உடலைக் கழுகுகள் கொடூரமாகக் கொத்தித் தின்னுமே' ' என்று கேட்டான்

அதற்குச் சுவாங்சே 'பூமிக்கு மேலானால் கழுகுகள் கொத்தித் தின்னும். பூமிக்குக் கீழானால் கறையான்கள் மெல்ல மெல்ல அரித்து உண்ணும். எப்படியானால் என்ன? கழுகுக்கு உதவி செய்யக் கூடாது கறையானுக்கே உதவிசெய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்குஏன்ஏற்பட்டது? என்று கேட்டார்.

**பேராசிரியர் எ.சோதி**

## மீசாலை, கொடிகாமம்

# பாடசாலைகள் இயங்குவது குறித்து இறுதி முடிவெடுப்பதில் குழப்பமாம்

(மந்திகை)

தென்மராட்சிக்கல்வி வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம், மீசாலைப் பகுதிப் பாடசாலைகளை மீளவும் இயக்க முடிவு செய்த போதிலும் மிகச் சொற்ப அளவிலான மாணவர்களே அங்கு பயில விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருப்பதாக கல்வி வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகியவற்றை இயக்குவதற்கு முடிவு செய்யப்பட்டதையடுத்து முதற்கட்டமாக கடந்த 21 ஆம் திகதி முதல்25ஆம்திகதி வரைகல்வி கற்க விரும்பும் மாணவர்களைப் பதிவு செய்யுமாறு கோரப் பட்டமை தெரிந்ததே.

இதனடிப்படையில் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில்900க்கும் மேற்பட்ட மாணவர்கள் முன்பு கல்வி கற்று வந்த போதிலும் தற்போது 68 பேர் மாத்திரமே பதிவுசெய்துள்ளதாகவும்,

முன்பு ஆயிரம் மாணவர்கள் வரைகல்வி கற்றமீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் 97 பேரே கல்வி கற்க பதிவு செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இந் நிலையில் மேற்படி இரு பாடசாலைகளையும் இயக்குவது குறித்து இறுதி நிலைப்பாட்டில் பெரும குழப்பம் நிலவுவதாகவும் அறிய முடிகிறது. (உ-23)

# ஒரு கிலோ அரிசி 10 ரூபாவாக விற்பனை

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் ஒரு கிலோ அரிசி 10 ரூபாவாக விற்பனையாவதை அவதானிக்க முடிகிறது.

தென்மராட்சி சென்று வரும் பொதுமக்களே இவ்வாறு அரிசியை மிகக் குறைந்த விலையில் விற்று வருகின்றனர்.

இதேவேளை, இவ்வாறு விற்பனையாகும் அரிசி சில சந்தர்ப்பங்களில் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-79)

## சீவல் தொழிலாளர் வருமானத்தில் வீழ்ச்சி

(கோப்பாய்)

கசிப்பு உற்பத்தியின் அதிகரிப்பும் விற்பனையும் சீவல் தொழிலாளர்களின் வருமானத்தைப் பாதிப்படையச் செய்துள்ளதுடன், தெங்கு பனம் பொருள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாட்டையும் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளதாகச் சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (உ-79)

# துர் நாற்றம் வீசும் இந்து மயானம்

(ஈச்சமோட்டை)

வலிகாமம் மேற்கு வழுக்கையாற்றுப் பகுதிக்கு அண்மையில் உள்ள இந்து மயானத்திலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் அப் பகுதி வீதியால் செல்கின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர்,

இப் பகுதியில் இறந்த விலங்குகளை ஆழமற்ற குழிகளில் புதைப்பதனாலேயே இவ்வாறான துர்நாற்றம் வீசுவதாகவும்

இதற்கு உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து சுகாதாரத்தைப் பேண முயலவேண்டுமெனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (உ-59)

## யாழ். நீதி மன்றில் 24 பேர் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 24 சந்தேக நபர்கள் யாழ். சிறைச்சாலை அதிகாரிகளால்நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் பதில் நீதவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை ஒத்தி வைத்த நீதவான் 24 பேரையும் அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (ந)

# மலேரியா தடுப்புப் பணி காவலூரில் தீவிரம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையின் கீழ்உள்ள மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் மலத்தியோன் தெளிக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

மலேரியா நோய் பரவும் எனக்கருதப்பட்டே மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் மலததியோன் தெளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மலத்தியோன் தெளிக்கப்படுவதையும் தற்பாழுது மூன்றாவது தடவையும் தெளிக்கப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறைசுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி ச.திவ்வியகுமாரன் தெரிவித்துள்ளார், (உ-75)

## காணாமற் போனோரின்

# குடும்ப அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்டுக்காணாமற் போனவர்களது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க மனித கௌரவத்திற்கான மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினது அனுசரணையுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வேலை வாய்ப்புத் தொடர்பான மனித கௌரவத்திற்கான மன்றத்தின் உதவிகளைப் பெறவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளுமாறு அதன்இணைப்பாளர் ஐ. சிவராசா அறிவித்துள்ளார், [உ]

# சுன்னாகம் முகாமில் அடிப்படைவசதிகள் இல்லை

[மல்லாகம்]

சுன்னாகம் தெற்கு சபாபதி முகாமில் வசிக்கின்ற பொது மக்கள் அடிப்படை வசதிக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்;

இங்கு 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் நீர்வசதி, மலசலகூட வசதி என்பன போதியளவில் வழங்கப்படவில்லை.

இவ் வசதியீனங்கள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றை கையளித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-122]

## இராஜ வீதி ஊடான

# யாழ் - அச்சுவேலி பேருந்து சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இராஜ வீதி ஊடான யாழ்ப்பாணம் - அச்சுவேலி பேருந்துச் சேவை (பாதை இல.986) மீண்டும் நாளைமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச்சபைபொது முகாமையாளர் எஸ். மணிவாசகம் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக 90 ஆம் ஆண்டின் பின் இப் பாதையூடான பேருந்துசேவைஇடம் பெறவில்லை என்பதும், பின்னர் யாழ் குடா நாட்டில் பேருந்து சேவைகள் வழமை நிலைக்குத் திரும்பிய பின்னரும் இப்பாதையூடான பேருந்து சேவை நடாத்துவதில் சில முட்டுக்கட்டை நிலைமைகள் இருந்தமையும்,

தற்போது511 வது படைப் பிரிவினரின் அனுமதியுடன் இச்சேவை இடம் பெற விருப்பதும் குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, இப் பேருந்து சேவையை நடாத்துமாறு பொது மக்கள்கோரிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## தீ மிதிப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம்-அரசடி வீதி செல்வநாயக பூஷணி அம்பாள் கோயிலில் வரும் திங்கட்கிழமை, வைகாசி விசாகத் திருநாளை முன்னிட்டு தீ மிதிப்பு வைபவம்இடம் பெறவுள்ளது; (உ)

## இலவச சீருடைத்துணி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ்வாழும், தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் தைக்கப்பட்ட இலவச சீருடைத்துணிகள் பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டன;

மேற்படி மாணவர்களுக்கான சீருடை வழங்கல் தொடர்பான ஒழுங்குகளை பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர்கள் மேற்கொண்டனர். (உ-15)

## கசிப்பு உற்பத்தி

சங்குவேலி பிள்ளையார் கோயிலையண்டிய பகுதிகளில் தற்போது மிக அதிகளவில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாகஅறியப்படுகிறது; (உ-122)

## புடைவைக்கடை

# உரிமையாளரை தாக்கிய பொலிஸார்இடை நிறுத்தம்

(கொழும்பு)

புடைவைக்கடை உரிமையாளரைத் தாக்கிய பொலிஸார் மூவர் வேலைநீக்கம் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிலாபத்தில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

புடைவைக்கடை யொன்றில் 6 தினங்களுக்கு முன்னர் சேட் வாங்கிச்சென்ற பொலிஸார் ஒருவர், அதனைப் பாவித்த பின்னர் மாற்றித்தரும்படி கேட்டதற்கு கடைஉரிமையாளர் மறுத்துவிட்டார்.

இதனால் இருவருக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு பின்னர் மூன்று பொலிஸார் ஒன்று சேர்ந்து கடை உரிமையாளரைத் தாக்கியுள்ளனர்

இதுதொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து மூன்று பொலிஸாரும் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதி கடைகள் அனைத்தும் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் பெருமளவு பொலிஸார் வீதிகளில குவிக்கப்பட்டுள்ளனர் (உ 7)

# தொ.பயிற்சித்திணைக்களம் யாழில் இயங்குகிறது

[யாழ்ப்பாணம்]

தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் வலயம்-4 இன் பிராந்திய உப பணிமனை யாழ்ப்பாணத்தில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் கட்டடத்தில் தற்காலிகமாக [அண்மையில்] இயங்கத் தொடங்கியுள்ளது.

இதுவரைகாலமும்திருமலையில் இயங்கி வந்த இந்தப் பிராந்தியத்திணைக்களத்தில் மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்கியிருந்தன;

யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ள இப்பிராந்திய உபபணிமனைக்கு நடேசராஜன் பிரதிப் பிராந்தியப் பணிப்பாளராகத் தலைமையேற்றுள்ளார்.

தென் ஆசிய கலைகள், கலாசார நிலையத்தின் பணிப்பாளராகவும் தொழில் நுட்ப விரிவுரையாளராகவும் இவர் கடமையாற்றியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது; (வ)

## சண்டிலிப்பாய்

# பிரதேச செயலர் பிரிவில் மின் இணைப்புப் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீ லங்கா தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் மின் இணைப்பு பயிற்சி நெறி சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் நடைபெறவுள்ளது:

இப் பயிற்சி வகுப்புக்கள் நாளை ஆரம்பமாகுமெனவும் இப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றும் மாணவர்கள் தரம் 8 கற்றிருந்தால் மட்டும் போதுமானதாகும் எனவும் கற்கவிருக்கும் மாணவர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது; [உ-6]

# கருணாநிதியை சிறைக்கனுப்பும் முயற்சியில் மும்முரமாகச் செயற்படும் முதல்வர் ஜெயா

உலக தரிசனம்

முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மேல் அடுக்கடுக்கான குற்றங்களைச் சுமத்தி அவரைச் சிறைக்கனுப்பும் முயற்சியில் தற்போதைய முதல்வர் ஜெயா தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்.

தனது முயற்சிக்கு வலுச் சேர்க்கும் வகையில் கருணாநிதி மீது 25 வருடங்களுக்கு முன்பு தொடரப்பட்ட வழக்குகளை மீள விசாரணைக்குட்படுத்த ஜெயா முயல்கிறார் என்ற செய்தி ஊர்ஜிதமாகியுள்ளது.

இருப்பினும் இவ்வாறானதொரு நடைமுறை இந்தியச் சட்ட விதிகளுக்கு முரணானது என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கருணாநிதி மீது 25 வருடத்திற்கு முன்னர் தொடரப்பட்ட வழக்குகளை மீண்டும் கிளறி அவருக்கு சிறைத்தண்டனை அளிப்பதற்கு தற்போதய முதல்வர் ஜெயலலிதா இரகசியமாகச் செயற்பட்டு வருகிறார் என்று எழுந்த செய்திகளில் உண்மை இருக்கிறதென ஊர்ஜிதப்படுத்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கருணாநிதி மீது போடப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்



கள் மற்றும் பல்வேறு தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளை மீண்டும் தூசு தட்டி எடுத்து கருணாநிதியை சிறைக்கனுப்ப ஏதாவது வாய்ப்பிருக்கிறதா என ஜெயலலிதா கூட்டணியினர் முயன்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்காலிக விசாரணைக் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் 25 வருடங்களுக்கு முன்னர் தி.மு.க தலைவர்கருணாநிதி மீது போடப்பட்ட வழக்குகளை இந்தியச் சட்ட விதிகளுக்கமைய மீண்டும் தொடர முடியாது என தமிழகக் காவல்த்துறையின் முன்னாள் தலைவர் வி.ஆர் லக்ஷ்மி நாராயணன் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு ஆயினும் உயர் நீதிமன்றம் ஆயினும் தமது அதிகாரங்களை இவ்விடயத்தில் பயன்படுத்த முடியாது எனவும் அதற்கு இந்திய சட்டக்கோவை இடங்கொடுக்காது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## வியக்க வைக்கின்ற விந்தை நிகழ்வுகள்

### ★ கரப்பான் பிடித்தால் காசு வரும்

ஜப்பானில் உள்ள சந்தைக் கட்டடம் ஒன்றில் அளவுக்கதிகமாகப் பெருகித் தொல்லை கொடுத்த கரப்பான்களை அழிப்பதற்குச் சந்தை நிர்வாகத்தினர் உத்தி ஒன்றைக் கைக்கொண்டனர்.

ஒரு கரப்பானைப் பிடித்தால் 3 ரூபா தரப்படும் என அறிவித்தனர். அவ்வளவு தான் சிறுவர்கள் தங்கள் கைச்செலவுப் பணத்திற்காக கரப்பான் வேட்டையில் இறங்கினார்கள். இதன் மூலம் இதுவரை 98 ஆயிரத்து 500 கரப்பான்களை சிறுவர்கள் பிடித்துள்ளார்கள. இதற்காக அவர்களுக்கு கிடைத்த பணம் இரண்டு இலட்சத்து 5 ஆயிரத்து 500 ரூபா.

### ★ பல்லைப் பரிசளிக்கும் பீஜி மக்கள்

அவுஸ்திரேலியாவிற்கும் பிலிப்பைன்ஸிற்கும் இடையில் அமைந்துள்ளது பீஜி எனும் குட்டித்தீவு அங்கு அப்படி என்ன விஷேசம் என்கிறீர்களா?

பீஜித் தீவு வாசிகள் புதிதாக யாராவது விருந்தினர் வந்தால அவர்களுக்கு மரியாதை கொடுக்கும் முகமாக திமிங்கிலம் ஒன்றின் பல்லை அன்புடன் கொடுத்தனுப்புகிறார்கள். வேண்ட மறுத்தால் சட்டென்று கோபப்படுவார்களாம். (உ-9)

## ஆளும் அரசிற்கு ஆதரவு தொடரும்

(விஜயவாடா)

வாஜ்பாய் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதில்லையென்று தெலுங்கு தேசக் கட்சி அறிவித்துள்ளது.

கூட்டணிக் கட்சி அமைப்பில் மாநிலக்கட்சிகள் மத்திய அரசை வலுப்படுத்த வேண்டும் என்று அக்கட்சி கூறியிருக்கிறது.

இதேவேளைமாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் தெலுங்கு தேசக் கட்சி வலியுறுத்தியுளளது. (து)

## இந்தியா-பங்களாதேஷ் பேச்சுக்கள் அடுத்த மாதம்

[டாக்கா]

பங்களாதேஷ்-இந்திய எல்லையில, கடந்த மாதம் பங்களாதேஷ் படையினர் மேற்கொண்ட ஊடுருவல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன.

மேற்படி பேச்சுவார்த்தைக்கான அழைப்பினை இம்மாத முற்பகுதியில் இந்திய அரசு விடுத்திருந்தது தெரிந்ததே.

இவ் அழைப்பினை ஏற்றுக் கொண்ட பங்களாதேஷ் அரசு பேச்சுக்களை ஜூன் மாத நடுப்பகுதியில் நடாத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

பேச்சுக்கள் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் என அறிவிக்சப்பட்டுளளது. (உ9)

## தீவிரவாதிகளுக்கு எதிரான செய்திகளை வெளியிட பிலிப்பைன்ஸ் அரசு தடை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அரசுமுஸ்லிம் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்கு தடைவிதித்துள்ளது.

மூன்று அமைச்சர்கள் உட்பட 20 வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் பணயக் கைதிகளாக கடத்திச் சென்று கொலை செய்வதாக அச்சுறுத்தியதையடுத்தே அரசு இந்த தடை உத்தரவை விதித்துளளது.

இதேசமயம், தென்பகுதி தீவான பஸ்லின், மற்றும் யூரோப் ஆகியஇடங்களுக்கும் ஊடகவியலாளரை அனுப்ப வேண்டாமென்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்விவசாரம்தொடர்பாக தாம் மிகவும் உணர்வுபூர்வமான நிலையில் இருப்பதாக கூறிய ஜனாதிபதி இராணுவ நடவடிக்கை தொடர்பான செய்திகளை வெளியிடாமல் இருப்பதே சிறந்ததென தெரிவித்துள்ளார். (உ-7)

## இணை அமைச்சர் மீது கொலை முயற்சி
### இருப்பினும் ஈடேறவில்லை

(காஷ்மீர்)

இந்தியாவின் காஷ்மீர்ப் பகுதியில் வர்த்தகத்துறை இணை அமைச்சர்ஒருவர் மீது தீவிரவாதிகள்மேற்கொண்ட கொலை முயற்சியில் இருந்து அவர் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ நகரில் உள்ள பள்ளிக்கூடத்தில் இணை அமைச்சர் ஓமர் அப்துல்லா கணனி மையம் ஒன்றைத் திறந்து வைத்தபின் வீடு திரும்பிச் சிறிது நேரத்தில் ஆயுததாரிகளமேற்படி பாடசாலையில் குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

எறிகுண்டுகள் பள்ளிவளாகத்தில் வீழ்ந்து வெடித்ததில் இரண்டுமாணவர்கள் காயமடைந்துள்ளனர். மேற்படி, தாக்குதலை நடத்தியது தாங்கள் தான் என்று ஹிஸ்புல் முகைதீன் அமைப்பு உரிமை கோரியுள்ளது. (உ-9)

## பலஸ்தீனரின் தாக்குதலில் இஸ்ரேலியர் இருவர் பலி

(ரெல்அவிவ்)

மேற்குக் கரையின் காஸாப் பகுதியில் சென்றுகொண்டிருந்த கார் ஒன்றில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இஸ்ரேலியப் பெண்மணி ஒருவர் பலியாகியுள்ளார்.

இது போன்ற மற்றைய ஒரு தாக்குதலில் சிக்கி நேற்று முன் தினம் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவரும் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய- பலஸ்தீன அதிகாரிகள் அமைதிப் பேச்சு ஒன்றில் கலந்து கொள்ளத் தயாராகி வரும் இவ்வேளை இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவது கண்டிக்கத் தக்கது என்று மத்திய கிழக்கிற்கான அமெரிக்கத் தூதர் தெரிவித்துள்ளார். (உ-9)

## பரிதி இளம் வழுதி மீது பொலிஸார் தாக்குதல்
### நீதிமன்றில் சம்பவம்

(சென்னை)

சட்டசபையின் திமுக உறுப்பினரான பரிதி இளம் வழுதி பொலிஸாரினால்தாக்கப்பட்டார்.

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட பிரிதி இளம் வழுதி செய்தியாளர்களுடன் பேசமுற்பட்ட பொழுதே பொலிஸாரால் மிகமோசமாகத் தாக்கப்பட்டார்.

அவ்வேளை சில பத்திரிகையாளர்களும் தாக்கப்பட்டனர்.

இதற்குப் பின்னர் செய்தியாளரிடம் கருத்துத் தெரிவித்த பரிதி இளம்வழுதி தனது உயிருக்கு காவல்துறையினரால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (து)

## ஜனாதிபதியின் ஆதரவாளர்களால் வன்முறைகள்பரவலாக வெடித்தன
### இந்தோவின் அமைதிக்கு வேட்டு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் அப்துல் ரகுமான் வாஹிட்டின் ஆதரவாளர்களால் வன்முறைகள் வெடித்துள்ளன.

இந்தோனேஷிய உப அதிபர் மேகவதி சுகர்ண புத்திரியின் ஜனநாயகக் கட்சி அதிபருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதை ஆதரிப்பதையடுத்தே வன்முறைகள் வெடித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வன்முறை சிறு அளவில் தொடங்கினாலும் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று நாசமாக்கப்பட்டதுடன்சிறுஇராணுவ முகாமும் தீக்கிரையாக்கப் பட்டது.

சில இடங்களில் வீடுகள் வன்முறையாளர்களால் நாசமாக்கப்பட்டன.

ஜகார்த்தாவில் வன்முறையால் பெரும் பாதிப்புக்கள் ஏற்படலாம் என எழுந்துள்ள அச்சநிலை காரணமாக இராணுவம் மேலதிகமாகக் குவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தனக்கு எதிரான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பெரும் இரத்தக்களறிஏற்படுவதைத் தடுக்க முடியாதென வாஹிட் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

### குடியரசுத் தலைவர் கவனத்திற்கு

மேற்குவங்கத் தேர்தல் சீர்கேடுகளை எடுத்துக் கூற மம்தாபனார்ஜி குடியரசுத் தலைவரைச் சந்திக்க இருக்கிறார்.

18 பேர் கொண்ட குழுவுடன்மம்தாபானார்ஜி குடியரசுத்தலைவரைச் சந்திப்பார். [து]

## அமெரிக்க கப்பல் கொங் கொங் துறையில் நிற்க அனுமதி இல்லை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் போர்க்கப்பல் ஒன்றினை கொங்கொங் துறைமுகத்தில் தங்குவதற்கு அனுமதி கோரியிருந்த பொழுது சீனா அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே சீனாவின் தீவொன்றில் அமெரிக்க வேவு விமானம் தரித்து நிற்பதும், அது தொடர்பான தகராறு இன்னும் முடிவுறாத நிலையில் சீனக்கடற்பரப்பில்அமெரிக்கக் கப்பல் தரிப்பதற்கு சீனா மறுத்துள்ளது.

இதேவேளை, தலாய்லாமாவையும் தாய்வான் தலைவரையும் அமெரிக்காவில் தங்கிச்செல்ல அனுமதித்தது தொடர்பான சர்ச்சையும் சீன - அமெரிக்க நாடுகளிடையே தொடர்வது குறிப்பிடத்தக்கது. (து)

கற்றறிந்தோர் நம்முடன் கூடிப்பழகுவது இன்பத்தையும், நம்மை விட்டுப் பிரிவது துன்பத்தையும்தரும்:
குறள்

# வலம்புரி

## புகைத்தல் கலாசாரம்

சர்வதேச ரீதியில் புகைத்தலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை நிமிடக் கணக்கில் அதிகரித்து வருகிறது. தென்கிழக்காசிய நாடுகளில் புகைத்தல் ஆண்களுக்குரிய தென ஒதுக்கப்பட்டாலும், மேற்குலக நாடுகளில் இருபாலாரும் போட்டி போட்டு புகைத்தலில் தம்மை ஈடுபடுத்துகின்றனர்.

உலகளாவிய ரீதியில் புற்றுநோயின் தாக்கம் வேகமாக அதிகரித்துவரும் வேளையில் புகைத்தலால் ஏற்படும் நுரையீரல்-சுவாசம் சார்ந்த புற்றுநோயே கணிசமான பங்கை இடம் பிடித்துள்ளது. இவ்வாறு புகைத்தல் உயிரிழப்புக்குக் காரணமாக இருப்பதுடன் புகைக்கும் பழக்கத்தை உடையவரின் பிள்ளைகளுக்கும், அவரின் அருகில் இருப்பவர்களுக்கும் அதனால் பாதிப்பு ஏற்படுகிறதென்ற உண்மை இன்னமும் உறங்குவதாகவே தெரிகிறது.

புகைத்தல் கலாசாரத்தின் அடித்தளம் திரைப்படங்களாக இருந்த போதிலும் இப்பழக்கம் மாணவப் பருவத்திலேயே ஏற்படுகிறதென்ற உண்மையைபெற்றோர்களும், ஆசிரியர்களும் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

புகைத்தலும் - மது அருந்துதலும் இற்றைக் கால இளைஞர்களிடத்தே ஓர் கட்டாய கலாசாரமாக உருவெடுத்துள்ளது புகைக்கத் தெரியாதவன், வாழத்தெரியாதவன்- வாழ்க்கையை அனுபவிக்கத்தெரியாதவன்போன்ற கருத்துக்கள்புகைத்தலை, மதுவை புதியவர்களுக்குப் பழக்குவோரால் முன் வைக்கப்படும் தத்துவங்களாகும்.

ஓர் ஆண் என்றால் அவன் புகைப்பது அவசியம் என்ற அகோர உணர்வு என்று மாணவர்கள் மத்தியில் புகுந்ததோ அன்று முதல் மாணவர் குழாம் மறைவிடங்களில் கூடி புகைக்கும்பயிற்சியை பயிற்றுவிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

ஓர்மாணவன்புகைத்தலில் ஈடுபட்டால் அவனின் அடுத்த படி மதுப்பாவனையாகும். பாடசாலை மாணவர்களிடையே புகைத்தலும், மதுவும் வேகமாகப் பரவுவதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் ஓர் காரணமென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

---

### மறைந்தார் மாண்பு

# யோகர் சுவாமிகளின் தலையாய சீடனாகிய

# மௌன முனிவராம் மார்க்கண்டு சுவாமிகள்

சிவயோகர் என்னும் பெருங்கருணைப் பேராற்றில் மிதந்து செல்லும் சிறு துரும்பெனவே தன்னை மதிக்கும் தாழ்மையாந் தன்மை வாய்ந்த சைவர், யோகரால் சிவ தொண்டன் அடியவர்க்கு வழிகாட்ட ஒரு திசை காட்டியாக அமர்த்தப்பட்டவர். தனது அனுபூதியை வெளிக் காட்டிக் கொள்ளாத மௌனி, அந்த மௌன முனிவரே மார்க்கண்டு சுவாமிகள்.

### நியத்தலாவையில் எழுதுவினைஞர்

அவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரான்பற்று எனும் சிற்றூரில் 29. 01. 1899 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் சரவணமுத்து சுன்னாகம் சந்தையில் ஒரு சிறு வியாபாரியாவார். சிறுவயதிலேயே அவரது மனம் ஆன்மீக நாட்டமுடைய தாய்பிரார்த்தனைகளில் ஈடுபடுவதிலேயே காலம் கழிந்தது. கந்தரோடை இந்துக் கல்லூரியில் கல்விகற்ற இளைஞர் மார்க்கண்டர் 'கேம்பிரிச்சீனியர் பரீட்சையில் சித்தியடைந்தார். பொருளாதார நிலை காரணமாக மேல்படிப்பைத்தொடர முடியவில்லை. ஆனால் தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுது வினைஞராக சேர்ந்தார். இக் காலத்தில் தான், யோகர் சுவாமிகளின் அருட் பார்வை இவருக்கு கிடைத்தது: இளைஞர் மார்க்கண்டருக்கு ஆத்ம தாகத்தை ஆக்கிவிட சித்தம் வைத்தார் யோககுவாமிகள்: மார்க்கண்டரிடம் சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம் என்பன இயல்பாகவே பொருந்தியிருந்தன: அடிக்கடி மலைநாடு செல்லும் யோகர்சுவாமிகள் இளைஞர் மார்க்கண்டருக்கு ''ஆருமறியாமல் அந்தரங்கமாய்'' அருளைச் சொரிந்த வண்ணம் இருந்தார்.

நில அளவைத் திணைக்களத்தில் வேலை செய்த மார்க்கண்ட சுவாமிகளுக்கு எப்பொழுதும் உள்மனம் பரப்பிரமத்தை நோக்கியே இருக்க வேண்டும் எனக் கூறி 'வடதிசை காட்டும் கருவியைப் போல் இரு' என உபதேசித்தார், நில அளவை செய்வதற்கு பாதைகளை வெட்டுவது போல எங்கள் பாதையில் வரும் தடைகளை நாங்களே வெட்டி நீக்க வேண்டும். என்ற அருள் வாசகமும் உபதேசிக்கப்பட்டது. பதினெட்டு ஆண்டுகள் தியத்தலாவையில் பணியாற்றிய மார்க்கண்டர் உலகத்தை ஒரு கையிலும், உத்தி யோகத்தை ஒரு கையிலுமாகப்பிடித்தபடிஇருக்கையில் இவருக்குக்கொழும்பிற்குமாற்றம் கிடைத்தது.

### சைவசித்தாந்த ஈடுபாடு

கொழும்பில் கடமை புரிந்த மார்க்கண்டு சுவாமிகளிற்கு இந்தியாவிலிருந்து வந்துசைவ சித்தாந்த வகுப்புகளை நடத்திய பெரியவர்களின் சகவாசம் கிடைத்தது: ஆகவே, இவற்றை ஆராய்ந்து கற்றதனால் மனம் விருத்தியடைவதைக் கண்டார். இதனால் மனம் ஒடுங்கினஇடமே ஆறுதலைத் தரும் என்றும் உண்மையை

## நல்லூரான்

உணரலானார் தமது ஐம்பதாவது வயதில் உத்தியோகத்திற்கு முழுக்குப் போட்டு விட்டு கொழும்பிலிருந்து நேரே கொழும்புத்துறை சென்று யோகரைச் சரணடைந்தார். யோகரும் பூரண பிரம்மச்சாரியாகத் திகழ்ந்த மார்க்கண்டரை உலக பந்தங்களிலிருந்து விடுவிக்கச் சித்தமானார்.

1938 ஆம் ஆண்டு யோகர் சுவாமிகள் கைதடிக்கு சென்ற போது அண்மையில் சிவ தொண்டன் நிலையத்திலேயே பரிபூரணம் அடைந்த விசுவலிங்கம் ஆசிரியரின் தகப்பன் சின்னத்தம்பி என்பவர் யோகர் சுவாமிகளிடம், 'சுவாமி இங்கு நீங்கள் தனியாகத் தங்கக்கூடிய குடிசை ஒன்று உள்ளது' என்று கூறினார்: பொறுத்திரு. அதற்கு சிறிது காலம் இருக்கிறது: என்று யோகர் கூறினார். 1940 ஆம் ஆண்டில் கைதடியிலுள்ள குடிசையை துரிதமாக ஆயத்தம் செய்து பால் காய்ச்சுமாறு விசுவலிங்கம் ஆசிரியருக்கு பணித்தார். மேலும் அங்கு நாடோறும் விளக்கேற்றி திருமுறைகள் நற்சிந்தனை முதலியன ஓதுமாறும் கூறினார்:

### விசுவலிங்கம் ஆசிரியர்

ஆசிரியர் விசுவலிங்கம் கிழமைக்கு ஒரு தடவை கொழும்புத்துறை சென்று யோகர் சுவாமிகளைத் தரிசிப்பார், 1950ல் ஒருமுறை இவர் கொழும்புத்துறை சென்றபோது, யோகர்சுவாமிகள் அன்று அவரைத் தங்குமாறு பணித்தார். அடுத்த நாள் காலை 'விசுவலிங்கம் இனிக் கைதடியில் இருக்க உனக்கு ஒரு நல்ல சினேகிதனைத் தருகிறேன். அவன் உங்களுக்குப் போகும்போது எல்லாவற்றையும் தந்துவிட்டுப் போவான். நான் நாளை கைதடிக்கு அவனுடன் வருவேன்' என்று கூறினார். விசுவலிங்கமும் உடனே கைதடி சென்று எல்லா ஆயத்தங்களையும் செய்து சுவாமிகளின் வருகையை எதிர்பார்த்த வண்ணமிருந்தார்.

யோகர் சுவாமிகளும் தாம் சொன்னபடி கார் ஒன்றில் ஒருவருடன், கட்டில், மெத்தை, உணவு தயாரிக்கும் எண்ணை, அடுப்பு போன்றவற்றையும் எடுத்து வந்தார். இன்று நல்ல நாள் என்றுகூறிஒரு சோறும் ஒருகறியும் சமைத்து தருவும் சீடனும் உண்டபின் யோகர் கொழும்புத்துறை சென்றார்:

### சிவத்தியானம்

மார்க்கண்டு சுவாமிகள் 1984ம் ஆண்டு தாம் சமாதியாகும் வரை இவ்வாச்சிரமத்திலேயே இருந்து தவமியற்றினார். மனத்தை ஒடுக்கி சிவத்தியானத்திலேயே இருப்பார். பிராணாயாம பயிற்சியில் ஈடுபட்ட மார்க்கண்டரை, யோகர்சுவாமிகள் மூச்சைப் பிடித்துபிராணாயாமம் செய்யத்தேவையில்லை, சிவத்தியானம் செய்ய இவை எல்லாம்தாமே வரும். குண்டலினியின் சக்தியைப்பற்றியும் சிரத்தை கொள்ளாதே. சித்திகள் வரும் போகும்: அவற்றிற்கு அப்பால் சென்று சும்மா இரு. சும்மா இருக்க சுகம் உதயமாகும்: சர்வம் பிரம மயமாகத் தெரியும்' என உபதேசித்தார்: மார்க்கண்டு சுவாமிகளின் கொட்டிலுக்கு வந்து சில மகா சிவராத்திரி தினங்களில் யோகர் சுவாமிகள் நிஷ்டையில் இருப்பார்கள்:

### பல சிவதொண்டர்கள்

பல சிவதொண்டர்களை யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஆன்மிக அனுபவத்தைப் பெறுவதற்காக கைதடிக்கு அனுப்பினார்கள். அவர்களுள் சோல்பரி பிரபுவின் மகன் சந்தசாமி பல வருடங்கள் கைதடியிலிருந்து தமது சாதனைகளை மேற்கொண்டான். அமெரிக்கர் சுப்பிரமுனியசுவாமி, ஜேர்மன் கௌரிபாலாசுவாமி, அவுஸ்திரேலிய பன்றிக்குட்டி சுவாமிகள் சில பௌத்த துறவிகள் கூட மார்க்கண்டு சுவாமியை தரிசிக்க அடிக்கடி வருவர்.

தமது குருநாதன் சமாதி அடைந்த பின்னரே அன்பர்களை தம்முன் கற்பூரம் கொழுத்தி வணங்க அனுமதித்தார். வழிபடும் அன்பர்கட்கு அவரவர் தேவைக்கேற்ப உறுதி செய்யும் ஆறுதலையும் அளிக்க வல்ல திருமுறைப் பாடல்களையும், நற்சிந்தனைப் பாடல்களையும் சொரிவதன்றி தம் வாக்காக எதனையும் சொல்ல மாட்டார். அவர் குருநாதனைச்சித்தத்தில் திகழவைத்ததால் குருநாதன் கூறுபவற்றையே அவராலும் கூறமுடிந்தது.

### சிவபதமடைந்தார்

சுவாமிகள் தமது அந்திம காலத்தில் (85-வயதில் தம்முடன் உடனுறைந்திருந்த சோல்பரிப்பிரபுவின் மகன் ராய்ஸ்பே தய(சந்தசுவாமி) அவர்களுக்கு ஈமெயிலின் மூலமாக அவரது உறவினர்களை இங்கிலாந்து சென்று பார்க்குமாறு கூறினார். சந்த சுவாமியும் இங்கிலாந்து புறப்பட்டார். சுவாமி எது உடல் தளர்ச்சியடைந்து காணப்பட்டதால் யோகுடசுபதி போன்ற வைத்திய நிபுணர்கள் மார்க்கண்டு சுவாமியை பார்வையிட வந்தனர். ஆனால் சுவாமிகள் அதை விரும்பவில்லை தமக்கு ஒரு வருத்தமுமில்லை என்று கூறிவிட்டார். ஆனால் சுவாமிகளின் உடம்பிற்கு அந்திமகாலம் நெருங்கி விட்டது என்பதை சுவாமிகளின் அன்பர்கள் உணர்ந்தார்கள். ஆனால் சுவாமிகளோ சும்மா இருந்து இரத்தாஷி வருசம் வைகாசி மாதம் 16ந் நாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் பன்னிரெண்டு மணிக்குகார்த்திகை நட்சத்திரத்தில யோக குருநாதன் திருவடிகளைப் பற்றினார்.

---

# சாயி அருளமுதம்



தினமும் நீங்கள் தூங்கும் போது எங்கேயிருக்கிறீர்கள்? நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? உங்கள் புலன்கள தொழிற்படுவதில்லை; உங்கள் புத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்: உங்கள் மனம் தனக்கென ஓர்உலகத்தைச் சிருட்டித்து, அதில் சிறிது நேரம் விளையாடிய பின், செயலற்றுப் போய் விடும். அது தான் தூக்கம் எனப்படுகிறது. உங்கள் பிரயாணத்தில் சமாதிக்கு ஆகக் கூடிய சமீபமாகச்செல்லும் நிலை அதுவே. சாந்தியை நிச்சயமாகக் கொடுக்கக் கூடிய ஆத்மத்துவத்தில் வாழுங்கள்: 'ராகம்' துவேஷம் (ஆசை, வெறுப்பு) ஆகிய விஷம் உங்களுக்குள்ளேயிருக்கும் போது, நீங்கள் ஆரோக்கியமாக இருப்பதாக எப்படிக் கூறமுடியும்? ஆத்மத்வம் என்பதை நீங்கள் அனுபவித்தால், சாட்சாத் 'பகவான்' ஆகி விடுவீர்கள்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

---

# முரண்பாடுகளைத்தீர்த்தல் கருத்தரங்கு இன்று

மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்காக நடத்தி வரும் ''முரண்பாடுகளைத் தீர்த்தல்'' தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்குத் தொடரில் அடுத்த கருத்தரங்கு இன்று காலை 9 00 மணிக்கு யா/கனகரட்ணம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் யா/கனகரட்ணம் மகா வித்தியாலய அதிபர் வீ மாணிக்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொளகிறார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலம்பிகை சுப்பிரமணியம், மகளிர் அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் புஷ்ப சின்னையா ஆகியோர் கலந்து கருத்துரைவழங்குவர்.

(உ)

# கணவனின் கடியில் காதிழந்த மனைவி

(கண்டி)

மது போதை காரணமாக தள்ளாடிக் கொண்டு வந்த கணவன் மனைவியின் காதை கடித்துத் துண்டாக்கிய சம்பவம் கண்டியில் உள்ள கலகெதர எனும் இடத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது அதிக மதுபோதையுடன் வீடுவந்த கணவன் மனைவியுடன் எழுந்த வாக்குவாதத்தால் கோபமடைந்து ஒரேகடியில் மனைவியின் காதை துண்டாக்கியுள்ளார்.

(உ-9)

# புலிகளின் தடையை நீக்குவதற்கு

# ஸ்ரீ. சு. க. உறுப்பினர்கள் ஆலோசனை

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை அரசாங்கம் தற்காலிகமாக நீக்குவது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற போதே இக்கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

இனப்பிரச்சினை தீர்வுக்கு கட்சி உறுப்பினர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டு என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

அரசுக் கெதிரான எதிர்க் கட்சிகளின் பிரசுரம் மற்றும் பத்திரிகைகளின் பிரசுரம் தொடர்பாக ஆராய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது இக்குழுவில் அமைச்சர்கள் மங்கள சமரவீர அனுரா பிரியதர்ஷன யாப்பா சரத் அமுனுகாம ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். [வ]

## வெட்டுப்புள்ளி

தளபதி மேஜர்ஜெனரல் சந்திரபாலா மற்றும்52ஆவது படையணித்தளபதி பிரிகேடியர் குலதுங்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கோரிக்கைகளைநான் ஏற்றுக் கொள்கின்றேன். வெட்டுப்புள்ளியை மேலும் குறைத்து கூடுதலான மாணவர்களையாழ் பல்கலைக்கழகத்துக்கு சேர்த்துக் கொள்வது தொடர்பாக அண்மையில ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பேசியுள்ளேன் அதற்கு ஜனாதிபதிஇணக்கம் தெரிவித்துள்ளார். உத்யோகபூர்வமாகமுடிவைவெளியிடும்படி நான் ஜனாதிபதியை கோரியுள்ளேன் எனவே உங்களுக்குநல்லமுடிவுகிடைக்கும் நீங்கள் அமைதியாக நம்பிக்கையுடன் இருங்கள்என்று தெரிவித்துள்ளார். (இ)


**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

சத்தியராஜ், குஷ்பு. சுபாஷி நடித்த

**உன்னைக் கண் தேடுதே**

தினசரி [ரீஸ்]
11-00, 2-30 பு. நே.

(கி-2051)


## செய்தித்

தற்போது இச்சட்டவிதியை ஜனாதிபதி சந்திரிகாமுற்றாக நீக்கியுள்ளார்.

இதன் பிரகாரம் இனிமேல் இராணுவம் சம்பந்தமான செய்திகளுக்கு தணிக்கை இல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பானவர்த்தமானிஅறிவித்தல் வெகுவிரைவாக வெளிவரவுள்ளது.

செய்தித் தணிக்கையை நீக்குமாறு ஊடக அமைப்புக்களும், பொது அமைப்புக்களும் அரசை வற்புறுத்தி கோரிக்கைகள விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சமாதானத்தை

கடினமானதாகவே அமைந்திருக்கும். இருப்பினும், எவர் தடையாக இருந்தாலும் அதனைக்களைந்து சமாதான முயற்சியில் வெற்றி காணுவோம். என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அந்நம்பிக்கை வீண்போகாதவகையில் சமாதானத்திற்கான இடைவெளியை சுருக்கி வெற்றி காண்பதில் நோர்வே தற்போது ஈடுபட்டுள்ளது

தற்போதைய அரசியல் கொந்தளிப்பின் சூழ்நிலையில் தற்போதைக்கு கொழும்பு செல்லக் கூடிய வாய்ப்புகள் இல்லை, அதற்குரிய நிலமை இன்னமும் கொழும்பில் ஏற்படவில்லை என்றும் எரிக் சோல் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதில்லை என்றஜனாதிபதியின் அறிக்கையைஅடுத்து எரிக்சோல் ஹெய்ம் அளித்துள்ள முதலாவது பேட்டிஇதுவாகும். (வ)

## அமைச்சர்...

ஆதரவு அளித்திருப்பதாக அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார். (வ]

## காவலரணிலிருந்த...

கிலத்தில்தான் மன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ் வழக்கு விசாரணை யூலை மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-06)

# மனைவியை உயிருடன் தீமூட்டிய பாதகன் ஏறாவூரில் சம்பவம்

(ஏறாவூர்)

மனைவியின் வீட்டை அடகுவைத்துஓட்டோவாங்குவதற்குபணம்தரதனதுஇளம்மனைவி மறுத்ததைஅடுத்து அவளை அவரது கணவன் உயிருடன் தீமூட்டி எரித்த பரிதாபகரமான சம்பவம் ஒன்று ஏறாவூர் மிச் நகரில் இடம்பெற்றுள்ளது.

கயாத்துமுகம்மது சித்திமுனாபிறா (வயது 24) என்ற இளம் பெண்ணே இவ்வாறு தீமூட்டி எரிக்கப்பட்டவராவார்.

இந்தப் பரிதாபகரமான சம்பவத்தை அடுத்து அவரது கணவன் முஸ்தபா அப்துல்நசாக்கை (வயது(27) பொலிசார்தேடி வருகின்றனர். (வ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விசாலாட்சி கந்தசாமி

வேலணைமேற்கைபிறப்பிடமாகவும்49/3இராசாவின் தோட்டம்யாழ்ப்பாணத்தைவதிவிடமாகவும்கொண்ட திருமதி விசாலாட்சி கந்தசாமி நேற்று காலமாகிவிட்டார். அன்னார் இளங்கோவன்(பிறப்பு இறப்புவிவாகப் பதிவாளர் ஊர்காவற்றுறை) அன்னலட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும், சறோஜினிதேவி(சட்டத்தரணி) இலங்கைநாதன் (உரிமையாளர் அன்னராஜாஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமாமியாரும், சசிதர் (லண்டன்) சசிகலா, சசிலதா, சசிகரன் (மாணவன் யாழ் மத்தியகல்லூரி) ஜனனி (மாணவி புனித ஜோன் பொஸ்கோ) கௌதமன் மாணவன் புனிதஜோன் பொஸ்கோ) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சடகோபனின் (உரிமையாளர் சண்முகா றேடேர்ஸ் யாழ்ப்பாணம்) பெரியதாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குஅன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

49/3 இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்
க. இளங்கோவன்
[மகன்]

[கி/2048]

## திருமதி கந்தசாமி குணபூபதி

(தெகிவளை)

தெகிவளை பின்வத்தை வீதி3/26இலக்க வதிவிடத்தையுடைய திருமதி கந்தசாமிகுணபூபதி அவர்கள் 29.05.01 அதிகாலை அன்னாரது இல்லத்தில் சிவபதமடைந்துள்ளார் அன்னார் திருநெல்வேலி நாகலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் A·C கந்தசாமியின் பாசமிகுமனைவியும் தர்மலிங்கம் பேரானந்தம், காலம்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை, மகாலட்சுமி, அமரர் வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரன் (கனடா) உமாராணி, (சட்டவரைஞர்திணைக்களம் கொழும்பு) கேதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் க.இராசேந்திரம் (துறைமுக அதிகார சபை கொழும்பு) தயாளினிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரமணன், அஞ்சனா, பவுத்திரா, யாதவன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் ஈமைக்கிரியைகள இன்று(31.05.0 ) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில phone 01.730388) நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரிற்கும் அறியத் தருகின்றோம்.


தகவல்
தம்பிஐயா ஆறுமுகம்
(பேறாமகன்)

சில்லாலை

(3182)

# 2-ம் ஆண்டு இதய அஞ்சலி

நல்லூர் பிரதேச சபை



| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 17 - 06 - 1967 | | 31 - 05 - 1999 |

## தோழர் தியாகராஜா ராஜ்குமார் (ரகு)

நல்லூர் பிரதேச சபையின் உப தலைவர் தோழர் தியாகராஜா ராஜ்குமார் (ரகு) அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி.

தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் உத்தியோகஸ்தர்கள்.

(கி 2047)


தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்

**வினோ நகைப் பூங்கா**

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. P. Fax: 2824 (கி/2022)


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, ஸ்ரான்லித்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு மே மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.